# புள்ளிக் கோலம்

உள்ளே குடியிருப்பவர்கள் தென்னிந்தியர் என்று அறிவிப்பதற்கு வாசற்புறம் போட்டிருக்கும் கோலச் சித்திரம் ஒரு குறிப்பு. கற்ற கோலங்களை மறக்காமலிருக்க வீட்டினுள்ளே போடுவேன். ஒருநாள் பிற்பகல், என் குழந்தை தன் கோல விரல்களால் கோலத்தை அழிக்க முயன்றுகொண்டிருந்தான். அழிவு வேலையில் செல்லும் கருத்தை ஆக்குவேலையில் ஊக்குவோமே என்று கருதி அவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சாக்குக்கட்டியால் சின்னஞ்சிறு கோலங்கள் வரையப் பழகிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

"உள்ளே வரட்டுமா அம்மா?" என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். வாசற்படியருகில் அமங்கலியான ஒரு மாது நின்றாள். யார் என்று கூர்ந்து பார்த்தேன்.

"வாசலில் கோலம் பார்த்து நம்மவர்கள் என்று தெரிந்துகொண்டேன். இரண்டு நாளாகவே வரவேண்டுமென்று நினைப்பு" என்று சொன்னபடி சற்று உள்நோக்கி வந்தாள் அந்த அம்மாள்.

"வரலாமே" என்று அழைத்து உட்காரவும் சொல்லிவிட்டேன்.

"தந்தியாபீஸ் கோபாலசாமி வீட்டில் சமையலுக்கு இருக்கிறேன். தெரியுமோ உனக்கு, அவர்களை?"

"பழக்கம் இல்லை. நாங்கள் இந்த ஊர் வந்தே ஆறு மாதங்காலந்தான் ஆகிறது. இடையில் ஊருக்குப் போய் வந்தோம். அப்போதுதான் அவர்கள் பெண்ணுக்கு க்ல்யாணம் தடபுடலாய் நடந்ததாம்" என்றேன்.

மாமிக்குப் பேசுவதற்கு விஷயம் அகப்பட்டுவிட்டது. "தடபுடலாவது? மாப்பிள்ளை மட்டுந்தான் சம்பந்தி. நாலு சிநேகிதர்கள் வந்தார்கள். பெண் வீட்டுக் கூட்டமும், ஊர் கூட்டின தடபுடலுந்தான் கொஞ்சம் நிறத்திருந்தன " என்றாள்.

"இதெல்லாம் எப்படி சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன் கிளுகிளுப்பாக.

"எல்லாம் விசாரித்தேன். கோபாலசாமி அகமுடையாளே சொன்னாள். இந்தக் கல்யாணம் நம்மூரில் நடத்தினால் சம்பந்திக் கூட்டமே இல்லையே, பிரமாதக் கல்யாணமா என்று உதட்டை பிதுக்குவார்கள் என்றுதான் இங்கேயே ந்டத்திவிட்டார்களாம். அதைப் பார்த்தே இந்த ஊரில் வாயைப் பிளக்கிறார்கள். பித்தளை வாளியா, வெள்ளிக் குத்துவிளக்கா என்று ஜனங்கள் அதிசயப் படுகிறார்கள். செய்கிறதெல்லாம் பெண்ணுக்கும் மாப்பிளைக்குந்தானே? இவர்களும் வாரிசு கொடுத்துச் செய்திருக்கிறார்கள்! எல்லாம் வெகு திருப்திதான் . . . ஆனால் மாப்பிள்ளை வயசு கொஞ்சம் அதிகம் என்ற குறையிருக்கும்போலிருக்கிறது . . . எல்லாமே கூடிவரணுமென்றால் வரன் குதிருமா? தனிக்காட்டு ராஜாராணியா யிருக்கலாமே என்றுதான் கொடுத்திருக்கிறார்கள்."

பேசிப் பொழுது போக்குவதற்காகவே மாமி வீடு தேடி வந்திருக்கும்போது 'ஏன் பிறரைப்பற்றி ப் பேச்சு வளர்த்தவேண்டும்?' என்று கேட்கமுடியாமல் கலங்கினேன்.

"மாப்பிளைக்கு முப்பத்துநாலு வயசாம்; பெண்ணுக்கு இருபத்திரண்டு இருக்காதா?" என்றாள் மாமி.

"தெரியாது," என்று சுருக்கமாய்ச் சொன்னேன்.

"இருபத்திரண்டுதான் இருக்கும். ஆனால் இருபத்துநாலு ஆகிறது என்கிறார்கள். மாப்பிளைக்குத் தகுந்தாற்போல் பெண்ணுக்கும் வயசைக் கூட்டிச் சொல்லித் திருப்தி அடைகிறார்கள் போலிருக்கிறது!" என்று சொல்லிக் குறும்பாக முறுவலித்தாள் மாமி.

நான் வாயைத் திறக்கவில்லை.

"கல்யாண போட்டோவைப் பார்த்தேன். மாப்பிள்ளையை எங்கோ பார்த்திருக்கிறேன் போலத் தோன்றுகிறது. உனக்குக்கூட என் மருமாளின் நாத்தனார் சாயல் இருக்கிறது. உயரம், வாய், கண் எல்லாம் அதே தான். ஆனால் அவள் நிறம் ரொம்ப மட்டு."

என்னை அறியாமல் சந்தோஷமாகச் சிரித்துக்கொண்டேன். என் சாயலை கொண்ட என் மைந்தனையும் ஒரு நீளப் பார்வைப் பார்த்தேன்.

"உன் பிள்ளைக்கு உன் சாயல்தான்; நிறம் குறைச்சல்; அவர் நிறமாக்கும்!"

என் சொந்த விஷயமாகப் பேச்சு வளைந்துவிட்டதால் மாமி கோபாலசாமி வீட்டு விஷயத்தை அறவே மறந்தாள். எங்கள் ஊர், உறவு, உத்தியோகம் எல்லாவற்றையும் விசாரித்தாள். சுமுகமாகவே சொன்னேன்.

விடை பெற்றுப் போகும்போது மாமிக்குப் பூரிப்புதான். "உன் உதவி சில சமயம் தேவையாக இருக்கும். ஊருக்குக் கடிதாசு எழுதவேண்டுமென்றால் எழுதித்தர யாரும் இல்லை. என்னதான் மக்கள் மனுஷர்கள் இல்லாமல் போனாலும், மருமான், மருமாள் என்றாவது எனக்கு இரண்டு பேர் இருக்கிறார்கள். எப்போதாவது ஒரு கார்ட் போட்டால்தான் திருப்தி. எழுதிக்கொடுக்கச் சிரமமில்லையே?" என்று மாமி தன் விருப்பத்தைச் சொல்லி என் கருத்தை வினவினாள். வம்புப் பேச்சு வளருமே என்று அஞ்சினாலும் "சிரமமென்ன?" என்றேன்.

"அந்தப் பெண் பத்மாவை எழுதச் சொல்லலாம் என்று பார்த்தால், அவளுக்கு அகமுடையானுக்கு எழுதத்தான் நேரம் சரியாக இருக்கிறது! நான் உனக்கு ரொம்பச் சிரமம் வைக்கமாட்டேன், பயப்படாதே!" என்று சிரிக்கச் சிரிக்கப் பேசினாள் ரங்கம்மாள்.

"பயம் என்ன? தினமும் இரண்டு கடிதம் எழுதுகிறது என் வழக்கம் தான்; கடிதம் எழுதக் கூசமாட்டேன்" என்று விடையளித்து, மாமியை அனுப்பினேன். கணவனுக்கு கடிதங்களாக வரைந்து தள்ளும் இளம் புது மனைவியை நகைப்பதுபோல் மாமி பேசினதற்கு என் மறுமொழி ஒரு சூடு!

ஆனால் ரங்கம்மாள்மேல் என் கவனம் படிந்துவிட்டது. அந்த அமங்கலத் தோற்றத்தில்கூட, அந்த அம்மாளிடம் ஒரு காந்தசக்தி இருந்தது. தமிழ்நாட்டிற்குப் புறம்பாக வாழுமிடத்தில், தமிழ்பேசித் தமிழ்த்தன்மையை முழக்கிய அந்த மாமி என்னைக் கவரந்துவிட்டாள்.

என் கணவரிடம் அவளைப் பற்றிச் சொன்னபோது, அவர் தத்துவம் ஒன்றை விளக்குவதைப்போலப் பதிலளித்தார். "வாயும் கையும் தான் அவர்களுக்குத் துணை.

உழைப்பையும் வாசாலகத்தையும் நம்பிதான், ஊரைவிட்டு, நாட்டைவிட்டு, வெளியேறுகிறார்கள். இயற்கையாகவே புத்தி நுட்பம் இருக்கும்; அதோடு அநுபவ அறிவும் சேருகிறது."

இருக்கலாம். அனால் வீடுவாசல், சுற்றம் கொற்றம் ஏதுமின்றி தன் கையே தனக்கு உதவி என்று வாழ எத்தகைய மனத்திண்மை வேண்டும்? எத்தனை இடிகளை, அடிநாளில் பட்டபின் வந்திருக்கும் அந்த வலிமை?

** ** **

அன்று வந்ததற்கு முற்றும் மாறாக, கனவேகமாக வீடு நுழைந்து வந்தாள் ரங்கம்மாள், இரண்டாம் முறை. "உனக்குக் கையொழிந்திருக்கிறதோ அம்மா? ஏதாவது வேலை இருந்தால் சொல்லு; நான் செய்கிறேன். நீ எனக்கு இப்போதே ஒரு கடிதாசி எழுதித்தரவேண்டும்," என்று சொல்லி, மாமி புடவைத் தலைப்பியிலே சுற்றி வைத்திருந்த மூன்று கார்டுகளை எடுத்தாள்.

"இந்த மூன்றையும் வைத்துக்கொள். ஒரு கவர் தா. பெரிய காகிதமாய்க் கொண்டு வா. முக்கிய விஷயம் இருக்கிறது. கவர் எழுத எனக்கு அவசியமே இல்லை என்று வாங்கிவைக்கவில்லை. இப்போது ஒரு கெடுபிடி சமாசாரம், " என்று கவலையோடு பேசினாள்.

"எங்கள் வீட்டில் தபால் செலவு கணக்கே இராது", என்று சொல்லி, அந்த கார்டுகளை ஏற்க மறுத்துவிட்டுப் பேனாவைப் பிடித்துக் கொண்டு தாளுடன் உட்கார்ந்தேன்.

"முதலில் சமாசாரம் கேட்டுக்கொள். எது முக்கியம் என்று பார்த்து கோவையாக எழுதிவிடு. அன்றைக்குச் சொன்னேன் பார், பத்மா புருஷணை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று. அவன் எங்கள் ஊர்ப் பிள்ளை! மூர்த்தி மூர்த்தி என்று சொன்னால் தெரிகிறதா? எனக்குத் தெரியவில்லை. மனசுமட்டும் குறுகுறுத்தது. முழுப் பேர் கேட்டேன். நரசிம்ம மூர்த்தியாம். எங்களூரில் எனக்கு எட்டின உறவு. நாமகிரியின் வளர்ப்புப் பிள்ளைக்கும் இதே பேர். ஆறு வயசாக இருக்கும்போது எடுத்து வளர்க்க ஆரம்பித்தாள். ஆறு வருஷமாய்ப் பிள்ளையைப் பற்றித் தகவலே இல்லை என்று அழுதுகொண்டிருக்கிறாள். மிலிடரி வேலைக்குப் போனான். இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை வந்து போனான். அப்புறம் வருவதையே நிறுத்திவிட்டான். பணமும் வரவில்லை. உயிரோடுதான் இருக்கிறானோ என்பதுகூட தெரியாமல் தவிக்கிறாள் நாமகிரி. நான் ஊர்ப்பக்கம் போய் வருஷம் இரண்டாகின்றன. எனக்கு என்னவோ இந்தப் பிள்ளையாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. மிலிடரியில் இருந்ததனால் இப்போது நல்ல உத்தியோகமாமே! ஒரு கடிதம் எழுதிப்போட்டு நம்மாலான உபகாரம் செய்வோமே என்று என் எண்ணம். உடனே நாமகிரியை வரச் சொல்லி எழுதவேண்டும். பத்து நாள் கூட இல்லை தீபாவளி. ஒரு வார லீவில் வருகிறானாம் அவன். பிள்ளை இல்லை என்று தெரிந்தால் திரும்பிப் போகிறாள். பிள்ளை தான் என்று தெரிந்ததோ, விடமட்டாள்."

இத்தனை நேரமும் திகைப்புடனே கதை கேட்டுக்கொண்டிருந்த நான், ஊர், தேதி போடக்கூட தடுமாறினேன்.

என் கடிதம் எத்தகைய விபரீத விளைவுகளுக்கு அடிகோலுகிறதோ? நான் தான் எழுதவேண்டுமா, இதை? முக்கியமான பத்திரத்திலே கையொப்பமிடுவதுபோல் ஒரு உள்ளக் கிளர்ச்சி. எங்கேயோ சிறு கிராமமொன்றின் கோடியில் தனிமையில் கண்ணீர் உகுக்கும் ஒரு வளர்ப்புத் தாய்க்கு என் கடிதம் மகிழ்வளிக்கும் என்னும் நப்பாசை சொற்பந்தான். அவளுடைய பிள்ளை இவன் அல்ல என்று ஏற்பட்டால், ஏமாற்றம் ஏற்படும். அவனேதான் இவன் என்று ஏற்பட்டதோ, ஒரு காதல் இருதயத்திற்கு அதிர்ச்சி. எல்லாமே சோடை என்று கண்டபோது ஒரு சின்னஞ்சிறு குழந்தை என்ன பாடுபடும்? அதுபோலல்லவா பத்மா கணவனை எண்ணி மறுகுவாள். யந்திரப்போக்கில் விஷயம் கடிதத்தில் ஏறியாயிற்று. நாமகிரியை வரச்சொல்லியாயிற்று. மாமி சந்தோஷமாகப் புறப்பட்டாள், நான் எழுதிக் கொடுத்த கடிதத்தைப் பெற்றுகொண்டு.

என் கணவரிடம் இந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் "மாமியின் ஊகம் சரியாகவே இருக்கும். இல்லாவிட்டால் பணம் செலவழித்துக் கொண்டு ஓடி வரச் சொல்லி எழுதமாட்டாள்" என்றார்.

கடிதம் எழுதிய எனக்கு நிம்மதி இல்லை. பிறர் விஷயத்தில் தலையிட மாட்டேன், கைவைக்க விருப்பம் இல்லை என்று அவளிடம் கண்டிப்பாக சொல்லியிருக்கலாம். அவள் பறந்ததைப் பார்த்து மறுக்க முடியவில்லை.

பத்மாவை இரண்டோர் இடங்களிலே பார்த்திருக்கிறேன். அமைதி செறிந்த முகம். கண்களிலேகூட இளமையின் துடிப்பு வெகு அடக்கமாகத் தெரியும். அவள் வாழ்க்கையில் அமைதி இருக்க வேண்டுமே!

ஒரு வாரங்கழித்து ரங்கம்மாள் "கடிதம் வந்ததா?" என்று கேட்க வந்தாள்.

அன்று எங்கள் விலாசமிட்டு அவளுக்கு வந்த கடிதத்தைப் படித்துக் காட்டினேன்.

"நல்ல வேளை, தாமதிக்காமல் புறப்பட்டு வருகிறாள். ஸ்டேஷனுக்குப்போய் அழைத்துக்கொண்டு வந்துவிடுவேன். அவள் பட்ட கஷ்டம் இனிமேலாவது விடியட்டும். அந்தப் பிள்ளை நேற்றே வந்துவிட்டான், வேட்டகம் சீராட. இவனை மெனக்கெட்டு எடுத்து வளர்த்து ஆசை வைத்தாள் நாமகிரி, இந்தக் கஷ்டம் பட்டுக்கொள்ள. நாளைக்கு அவள் வந்துவிடுவாள். இவனுக்குச் சோதனைதான்!" என்று மாமி உற்சாகமாய்ப் பேசினாள்.

என் நெஞ்சு உலர்ந்தது. "மாமி, நாமகிரியை இங்கே இறக்கவேண்டாம்" என்றேன்.

மாமி எனக்குமேல் சாமர்த்தியம். "ஐய! நீ சொல்லவேண்டுமா என்ன? நீங்களெல்லாம் ஒரே ஊரில் ஒற்றுமையாய் இருக்கவேண்டியவர்கள். எனக்கு இந்த ஊரும், கோபாலசாமி வீட்டு வேலையும் நிலையில்லை; எனக்குப் பொல்லாப்பு வந்தால் லட்சியம் இல்லை. உங்களுக்குள்ளே மூஞ்சியைத் தூக்கிக்கொள்ள இடம் வைப்பேனா? பயப்படாதே! என் உறவுக்காரி வருகிறாள், ஒரே நாளில் போய்விடுவாள் என்று சொல்லி என்னோடேயே வைத்துக்கொள்கிறேன். சம்பந்தியம்மாள் என்று தெரிந்த பிறகு விரட்டிவிடுவார்களா? உன்னைக் கடிதம் எழுதச்சொல்லி சிரமபடுத்தினது போதாதா? உனக்குச் சங்கடம் ஏற்பட வைப்பேனா? இதோ, இந்தக் கவரை வைத்துக்கொள்; இத்தனை நேரம் நினைவில்லை. உனக்குக் காசு பணம் தேவையில்லை. எனக்கு அப்படியா? கணக்காகத்தான் இருப்பேன்" என்று மாமி பேசிவிட்டு, சிரித்துக்கொண்டே தபால்கவரை மேஜைமேல் வைத்துவிட்டாள்.

எதிர்பாராத பரிசைப் பெற்றாற்போல் எனக்கு இனிமையான ஆறுதல் உண்டாயிற்று. மமி கொடுத்த தபால்கவருக்காக அல்ல. அவள் எனக்கு இடர் வராமல் செய்ததற்காக. கதம்ப நிகழ்ச்சியில் என் பங்கு முடியாததுபோலும், மீதியை ரசித்து மகிழ சபையோரிடையே வீற்றிருப்பதுபோலவும் ஒரு தெளிவு வந்தது எனக்கு.

"பட்சணங்கள் செய்யவேண்டியிருக்குமே? நீங்கள் இங்கே வந்திருப்பது தெரியுமா அவர்களுக்கு?" என்று கேட்டேன்.

"தெரியாது. இரண்டு மணிக்கு மேல்தான் போய்ச் செய்வேன். பண்ணிரண்டிலிருந்து இரண்டுவரை 'டூட்டி' கிடையாது" என்று எடுப்பாகப் பேசிச் சிரித்தாள் ரங்கம்மாள்.

"உனக்கு ஒரு புது பட்சணம் செய்யக் கற்றுத் தரப் போகிறேன்; புனாவில் நான் கற்றுக்கொண்டேன்; நாலு தேசத்துப் பட்சணமும் தெரிந்துகொண்டால் நல்லதுதானே? தீபாவளிக்கு நீ பண்ணுவதைப் பண்ணிவிடு. இந்த அமர்க்களமெல்லாம் ஓயட்டும். பிறகு வந்து கற்றுத் தருகிறேன். எப்போது அந்தப் பட்சணம் செய்தாலும் என் நினைவு வரட்டும். வேறு என்ன அம்மா என்னால் செய்யமுடியும்?" என்று உணர்ச்சியுடன் பேசிவிட்டு எழுந்தாள் ரங்கம்மாள். இருதயத்தின் அடி ஆழத்தைத் தொட்டது உரை.

அன்பளிப்பு எந்த உருவத்தில் வந்தால் என்ன?

* * *

இம்முறை ரங்கம்மாளின் வருகைக்காக நான் காத்துக் கிடந்தேன். கங்கை நீராடலும், புத்தாடைப் புனைதலும், விருந்துண்ணலும் முடிந்துவிட்டன. என் மனம் மட்டும் நிறையவில்லை. கோபாலசாமியின் இல்லத்தில் தலைத் தீபாவளி எப்படி ஆயிற்று என்பதை அறியும் ஆவல் அடித்துக்கொண்டது.

மறுநாள் காலை என் சிநேகிதி ஒருத்தி உள்ளூர் வைத்தியசாலையில் மகவு பெற்றாள். அவளைப் பார்க்க அங்கே போனபோது, தொலைவில் ரங்கம்மாள் குப்பியில் மருந்து ஏந்து நடப்பதைப்பார்த்துத் துணுக்கத்தோடு, "என்ன மாமி?" என்று விளித்தேன்.

உன்னிடம் வரவேண்டும் என்று நினைத்தேன்; முடியவில்லை. எனக்கு உடம்பெல்லாம் வலி. நாமகிரிக்கும் ரெயிலில் வந்ததனால் ஒரே அலுப்பு. பிள்ளை தான் என்று தெரிந்த பிறகு இன்னும் மனம் ஒடிந்துபோச்சு. 'உயிரோடிருந்துகொண்டே மறந்து போனானே, ஏன்?' என்று அழுகிறாள். பிள்ளையாண்டான் தலையில் கையைத் தாங்கிக்கொண்டு தலைகவிழ்ந்து உட்கார்ந்துவிட்டான். 'ஏன் வந்தாய், எப்படி வந்தாய்?' என்று ஒரு பேச்சு கேட்பானா? வேட்டகத்தில் இப்படி அவன் சேதி அம்பலமான வெட்கக்கேடு ஒரு பெரிய தண்டனையாச்சே! வீட்டில் எல்லார் மூஞ்சியும் கடுகாயிருக்கிறது. பெண்டாட்டியை அப்புறம் கூட்டிக்கொண்டு போகிறானாம். நாமகிரியை இப்பொழுதே கூட்டிக்கொண்டு போகிறதாகச் சொல்லிவிட்டான். பெண்டாட்டியை அழைத்துக்கொள்கிறபோது இவளை ஊருக்கு அனுப்பிவிடவேண்டும் என்ற எண்ணமாக இருக்கும். ஆனால் நாமகிரி இனிமேல் பிள்ளையின் பக்கம் விட்டு நகரமாட்டாள்" என்று மள மள வென்று பேசினாள்.

"அவர் மனசுக்கு அவர் செய்கிறது பித்தலாட்டம் என்று முன்னமே தெரியும். மற்றபேருக்கு எப்படி தூக்கிவாரிப் போட்டிருக்கும், பாவம்!" என்று நான் சொன்னேன்.

"பாவம் என்ன? ஒரு கல்யாணம் என்று செய்தால் குலங்கோத்திரம், ஊர் உறவு பார்த்துக் கொடுக்கவேண்டாமோ? 'கிடைத்தான் ஒண்டிக்கட்டை மாப்பிள்ளை' என்று கும்மாளப் பட்டதற்கு இது தண்டனை!"

நான் வந்த காரியத்தைச் சொல்லிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தேன், பெரிய காரியம் ஒன்றைச் சாதித்திருந்தும்கூட அந்த பூரிப்பு மாமியிடம் வெகு நுணுக்கமாகப் புலனாயிற்று. இதை என் கணவரிடம் சொல்லிக்கொள்ள இயலவில்லை, உத்தியோக விஷயமாக அவர் வெளியூர் போயிருந்தார்.

இரண்டு நாட்களாயின. ரங்கம்மாள் நாமகிரி பாட்டியுடன் வந்தாள்.

கடிதம் எழுத உதவிய என்னைப்பற்றிச் சொல்லிவிட்டுத்தான் அழைத்து வந்திருக்கிறாள் மாமி. நாமகிரிக்கு என்னை அறிமுகம் செய்வித்தாள். பிறகு அவர்கள் சந்தித்த அந்தக் காட்சியைச் சொற்சித்திரமாகத் தீட்டினாள். நரசிம்மமூர்த்தியை ஒரு நாழிகை திட்டினாள். நாமகிரி அம்மாளின் வக்கீலாக மாறிப் பேச்சுப் பொழிந்தாள்.

கிழவிக்கு இதமாக இருக்கட்டுமே என்று நான் "ஏதோ நடுவில் வந்த தடுமாற்றம். இனிமேல் அப்படி இருக்கமாட்டார். எப்போது புறப்படுகிறீர்கள்?" என்றேன்.

"உனக்குச் சொல்லவே இல்லையே! நாமகிரி பிள்ளை வீட்டுக்குப் போய்ச் சீராடியாச்சு! வந்தாச்சு!" என்றாள் ஏளனமாக.

புள்ளிக் கோலத்தில் புள்ளி பிசகினாற்போல எனக்கு கலக்கம் வந்தபோது, நாமகிரியம்மாளின் குரல் சிலிர்ப்பு வெளிப்பட்டது.

"அழைத்துப் போகிறதாகச் சொன்னான்; போனேன். நடுவில் ஒரிடத்தில் வண்டி மாறினோம். அப்புறம் இரண்டு மூன்று ஸ்டேஷனுக்கு அப்புறம் அவன் இறங்கினான். வருவான் வருவான் என்று நாலு ஸ்டேஷன் வரைக்கும் பார்த்தேன், அவனுடைய உத்தேசம் தெரிந்துவிட்டது. ஊருக்கே போய்விடலாமென்றுப் பார்த்தேன். ஆனால் இப்போது எனக்கு ரங்கம்மாவை விடச் சொந்தம் யாருமில்லை. இங்கேயே வந்து சேர்ந்தேன். பிள்ளைக் கண்டுகூட இப்படி ஆச்சு, நான் பண்ணின பாவம்!"

இந்த வரலாறு என் மனதை உறுக்கிவிட்டது. அப்படி என்ன வெறுப்பு வளர்த்தவள் மேல்? இது அடுக்குமா ஒரு ஆண் மகனுக்கு?

ரங்கம்மாள் கலங்காத நெஞ்சமுடைவள் அல்லவா? அமைதியாக வெளியிட்டாள் தன் யோசனையை. "நாமகிரி சத்திரத்தில் இருக்கிறாள். எனக்கும் கோபாலசாமி வீட்டில் இருப்பாக இல்லை. ரெயில் போகிற போக்கில் இரண்டுபேருமாகப் போகப்போகிறோம். உனக்கு நினைவாக அந்தப் பட்சணம் கற்றுத் தருகிறேன். சாமான்களை வாங்கிவை. நாளைக்கு வருகிறேன்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அலுவலை முடித்துக்கொண்டு காலையிலே வந்திருக்க வேண்டிய என் கணவர் வரவில்லை. பத்மாவின் வாழ்விலே என் கடிதம் புயலைக் கிளப்பியது என்ற மனச்சுமையோடு அந்த விசாரம் வேறு.

மறுநாள் முற்பகல், ரங்கம்மாள் பட்சணம் செய்து காட்ட வந்தாள்.

"கடைசியில் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை!" என்றேன்.

"நாமகிரியின் ஆறின் புண்ணை கிளறிவிட்ட மாதிரியாச்சு!" என்று மாமியும் வருந்தினாள்.

"பத்மாவுக்கு ஒரு புது காயம். அவளுக்கும் என்ன அவதி, பாவம்!" என்று நினைப்பூட்டினேன்.

"ஆமாம், அழத்தான் அழுதாள். 'பெற்றவள் அல்ல என்கிற விஷயம் உண்மையாகவே இருந்தாலும், வளர்த்தவளை மறக்கலாமா?' என்றுதான் கேட்டாள். 'என்னை மட்டும் பிரியம் மாறாமல் பார்த்துக்கொள்வாரா?' என்று புத்திசாலித்தனமாய்க் கேட்கிறாள். அதுவுந்தான் யார் கண்டார்கள்? ஒருத்தியோடு மணக்க மணக்க வாழ்ந்துவிட்டான். இவளையும் எப்படி ஆளப்போகிறானோ?"

மாமி இப்படிப் பேசினது விளங்கவில்லை. "எல்லா விஷயத்திலுமே தப்பு செய்வானா ஒருத்தன்? வளர்த்தவள் என்ற நன்றி உறைக்காவிட்டாலும், தன்னை நம்பினவள் என்ற அக்கறை இருக்காதா, கட்டின பெண்டாட்டியிடம்?"

"கட்டின பெண்டாட்டிதான். ஏன், அம்மாவுந்தான் அண்டி வந்தாள்; நம்பியிருந்தாள். ஈவிரக்கம் இருந்ததோ? அவன் ஜாதகமே அப்படி. பெற்றவள் ஒழிந்தே போனாள்; வளர்த்தவளும் வேண்டியிருக்கவில்லை; நாலுபேர் பார்த்துக் கட்டிவைத்த பெண்டாட்டி ஒட்டவில்லை. தானாகவே பார்த்துப் பண்ணிக்கொண்டிருக்கிற பெண்டாட்டியும் எப்படி தக்கப் போகிறாளோ? " சாபமிடுவதுபோல மாமி பேசிய தொனி! ஏமாற்றத்தோடு மாமியைப் பார்த்தேன்.

"புதுசு புதுசாய்ப் பேசுகிறீர்கள். முதல் பெண்டாட்டியா?" என்று கேட்டேன்.

"முதல் பெண்டாட்டி சமாசாரம் பழசாச்சே!" என்று மாமி இடக்குப் பேசினாள். எனக்குக் கோபம்.

"முதல் பெண்டாட்டி இருந்தாளா?"

"இருக்கிறாள்; ஏதோ தகராறு வந்தது, அவளைத் தள்ளி வைத்தாயிற்று. வேறே கல்யாணம் பண்ணிவைக்கவும் ஏற்பாடாயிற்று. அப்போது மிலிடரி வேலைக்குப் போனான்; அப்புறந்தான் தெரியுமே உனக்கு?"

"மாமி," என்று அழைத்தேன், கனலிடும் கருத்துடன். "பெண்டாட்டியைக் கைவிடலாம் என்ற போதனைதான் வினை வளர்த்தது. வளர்த்தவளையும் கைவிடலாம் என்று தோன்றிவிட்டதே!" என்று முழக்கம் செய்தேன்.

ரங்கம்மாள்தான் எதற்கும் எளிதில் சலனமடைய மாட்டாளே! "அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அவனுக்கு நன்மை செய்யத்தான் அவள் பார்த்தாள். அவன் பேச்சுப் பேசினாலே பாவம்! எங்கே, அந்த மாவைச் சாயத்தாற்போல கொட்டு, நிதானமாய். நான் குழைக்கிறேன். கட்டித் தட்டாமல் அப்போதுதான் மாப்பதம் நன்றாயிருக்கும். இரண்டுபேர் செய்தால் செய்யச் சௌகரியம். நீ பட்சணம் செய்யும்போது அகத்துக்காரரையும் ஒத்தாசைக்கு கூப்பிட்டுக்கொள். இப்பொழுதே நன்றாக கவனித்துக்கொண்டுவிடு. நான் நாளைக்கு ஊரைவிட்டுப் போகிறேனே!"

இப்படிச் சிரிக்கப் பேசும் மாமியுடன் தர்க்கமிட்டு _பயன் என்ன? அவள் உபகாரிதான்; அன்பு நிறைந்த உள்ளத்தினள்தான். ஆனால் வயதின் இயல்பினால், அவள் கனிவு நாமகிரியையே சார்ந்து நிற்கிறது. நரசிம்மமூர்த்தியின் மனைவியின் பரிதாப நிலைமை உறக்கவில்லையே!

எப்போதும் பேச்சுக்கு முந்திக்கொள்பவள் நான் தான். இம்முறை கணவர் முந்திவிட்டார்.

"வரத் தாமதமாகிவிட்டது. என் தட்டுச்சுற்று வேஷ்டியைப் பார்த்துவிட்டு ஒர் அம்மாள் என்னை விடேன் என்று பிடித்துக் கொண்டாள். என் வேலை மெனக்கட்டது, கடைசியில். பொய் சொன்னாலும் பொருத்தச் சொல்லவேண்டும். என்னவோ பணம் அனுப்பாமல், சோறு துணி கொடுக்காமல் வஞ்சனைச் செய்யக்கூடும் கல்நெஞ்சுப் பிள்ளை; அவளை ரெயிலில் விட்டுவிட்டு நழுவிவிட்டானாம். பொய்யும், புளுகும்! ரெயிலுக்கு அடியில் விழுந்து பிழைத்துவிட்டதாகச் சொன்னாலும் நம்பலாம். 'மதராஸ் போகிற வண்டியில் ஏற்றிவிடு' என்று கூடக் கூட சுற்றினாள். ஏற்றிவிட்டேன். கதைக்கிறாள் கதை! உதைக்கவேண்டும்!" என்று அவர், குமுறிக் கூச்சலிட்டார், வந்ததும் வராததுமாய்.

"கதையா? இல்லை," என்று தெரிவித்தேன்.

எங்கள் வீட்டு வாசலின் பொடிக்கோலம் ரங்கம்மாள் மாமியை எங்களகம் இழுத்து வந்தது. ரங்கம்மாள் துவைக்கிவைத்த பணியை, என் கணவரின் தட்டுச் சுற்று வேட்டிக் கோலம் முடித்து வைத்தது.

என் உள்ளத்திலே ரங்கம்மாளின் நினைவுச் சித்திரம் இருக்கிறது. கள்ளமில்லாப் பிள்ளை அழித்தது மாக்கோலம்; அந்த நினவுக்கோலமோ, முற்றுப்புள்ளி அறியாப் புள்ளிக்கோலம்.

**********

(கலைமகள், அகஸ்ட், 1953)